# மட்/கது/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| | | |
|---|---|---|
| தரம் - 07 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
| பெயர்/சுட்டெண் : | | புள்ளிகள் : |

### பகுதி – I
**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. கணினியின் முறைமை அலகில் (System Unit) காணப்படும் பிரதான பகுதி எது?
   1) வன்வட்டு  2) மையமுறைவழி அலகு
   3) தற்போக்கு பெறுவழி நினைவகம்  4) தாய்ப்பலகை

02. உருவுக்குப் பொருத்தமான கணினியின் பகுதி எது?
   1) தற்போக்கு பெறுவழி நினைவகம்  2) தாய்ப்பலகை
   3) வன்வட்டு  4) மையமுறைவழி அலகு




03. CPU என்பதன் விரிவாக்கம் யாது?
   1) Central Power Unit  2) Central Processing Unit
   3) Central Processor Unit  4) Central Port Unit


04. கணினியில் தரவுகளையும் அறிவுறுத்தல்களையும் தற்காலியமாக சேமிக்கும் நினைவகம் எது?
   1) பேனா செலுத்தி  2) தற்போக்கு பெறுவழி நினைவகம்
   3) வன்வட்டு  4) இருவட்டு

05. மைய முறையின் கதியானது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
   1) முறைவழிக்கதி  2) கடிகாரக்கதி  3) கணித்தல் கதி  4) மேற்கூறிய யாவும்

06. அருகில் காட்டப்பட்டுள்ள கணினியின் தலைமுறை எது?
   1) முதலாம் தலைமுறை
   2) இரண்டாம் தலைமுறை
   3) மூன்றாம் தலைமுறை
   4) நான்காம் தலைமுறை



உருவில் காட்டப்பட்டுள்ள மின்னனுத் தொழிநுட்பங்களை கருதுக.



A  B  C  D

07. உருவில் காட்டப்பட்டுள்ள A தொடக்கம் D வரையான மின்னனுத் தொழிநுட்பங்களின் பெயர்கள் முறையே எது?
   1) ஒன்றிணைந்த சுற்று, வெற்றிடக்குழாய், திரான்சிஸ்டர், நுண்முறைவழியாக்கி.
   2) வெற்றிடக்குழாய், ஒன்றிணைந்த சுற்று, திரான்சிஸ்டர், நுண்முறைவழியாக்கி.

3) திரான்சிஸ்டர், ஒன்றினைந்த சுற்று, வெற்றிடக்குழாய், நுண்முறைவழியாக்கி.
4) வெற்றிடக்குழாய், ஒன்றிணைந்த சுற்று, நுண்முறைவழியாக்கி, திரான்சிஸ்டா

08. பின்வரும் தேக்குசாதனங்களுள் திண்மநிலை ஊடகச்சாதனம் எது?
1) பளீச்சீட்டு செலுத்தி 2) வன்வட்டு 3) இருவட்டு 4) காந்த நாடா

09. உருவில் காட்டப்பட்டுள்ள தேக்கு சாதனம் எது?
1) நினைவக அட்டை 2) நெகிழ்வட்டு
3) காந்த நாடா 4) USB பளீச்சீட்டு செலுத்தி




10. கீழே காட்டப்பட்டுள்ள தேக்கு சாதனங்களுள் ஒளியியல் தேக்கு சாதனம் எது?



1)



2)



3)


4)

11. உருவில் A தொடக்கம் D வரை காட்டப்பட்டுள்ள பணிசெயல் முறைமைகளின் பெயர்கள் எவை?


A


B


C


D

1) Android, Fedora, Ubuntu, Windows 2) Android, Windows, Ubuntu, Fedora
3) Fedora, Android, Windows, Ubuntu 4) Android, Windows, Fedora, Ubuntu

12. கோப்பானது கோப்பு பெயர், கோப்பு நீட்சி என 2 பகுதிகளை கொண்டது அதில் கோப்பு நீட்சியின் பயன்பாடு யாது?
1) கோப்பினை இனங்காண்பதற்கு
2) கோப்பின் அளவை இனங்காண்பதற்கு
3) கோப்பு உருவாக்கப்பட்ட பிரயோகமென்பொருளை இனங்காண்பதற்கு
4) கோப்பின் பயனரை இனங்காண்பதற்கு

13. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கோப்பின் நீட்சி எது?
1) .txt 2) .pptx 3) .docx 4) .wod

14. பின்வருவனவற்றுள் கணினி மென்பொருள் எது?
1) பணிசெயல் முறைமை 2) தற்போக்கு பெறுவழி நினைவகம்
3) வாசிப்பு மட்டும் நினைவகம் 4) மையமுறைவழி அலகு

15. பயனருக்கு இரகசியமாய் தீங்கு பயக்கும் பிறழ்பொருள் வகை எது?
1) கணினி நச்சு நிரல் 2) கணினி வேம்கள்
3) ட்ரோஜன் குதிரைகள் 3) ஒற்றர் மென்பொருள்

16. கணினியை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் உயிர்மானக் கடவுச்சொல் எது?
1) மறைகுறிமுறையாக்கம் 2) தீச்சுவர்
3) விரல் அடையாளங்கள் 4) கணினி நச்சு எதிர்நிரல் மென்பொருள்.

17. இணையத்தளங்களை பாதுகாப்பாக பயன்படுத்தும் ஒரு வழிமுறை எது?
   1) நச்சு நிரல் எதிர்ப்பு மென்பொருள
   2) காப்பெடுத்தல்
   3) தீச்சுவர்
   4) மூடிய சுற்றுத் தொலைக்காட்சி

18. கணினி மிகை வெப்பமடைவதை இழிவளவாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை அல்லாதது எது?
   1) ஆய்வு கூடத்தில் வளிச்சீராக்கியை பயன்படுத்தல்.
   2) ஆய்வு கூடத்தின் யன்னல் மற்றும் கதவுகளை சிறிது நேரம் திறந்து வைத்தல்.
   3) ஆய்வு கூடத்தில் மின் விசிறிகளை பயன்படுத்துதல்.
   3) கணினிகளில் குளிர்த்தும் விசிறிகளை (Cooling fan) பொருத்துதல்.

19. மின் காரணமாக கணினிக்கு ஏற்படும் சேதத்தினை குறைப்பதற்காக பயன்படுத்தப்படும் சாதனங்கள் கீழே A தொடக்கம் C வரை தரப்பட்டுள்ளது இச்சாதனங்களுக்கான பொருத்தமான பெயர்கள் முறையே எவை?



A B C

   1) உருகி, தடைப்படாத வலு வழங்கி, எழுச்சிப்பாதுகாப்பு.
   2) எழுச்சிப்பாதுகபப்பு, தடைப்படாத வலு வழங்கி, உருகி.
   3) உருகி, எழுச்சிப்பாதுகபப்பு, தடைப்படாத வலு வழங்கி.
   4) எழுச்சிப்பாதுகபப்பு, உருகி, தடைப்படாத வலு வழங்கி.

20. ஆய்வு கூடங்களில் கணினிகளுக்கு ஏற்படும் சுற்று குறுஞ்சுற்றாவதற்குரிய பௌதிக காரணி எது?
   1) அதிக வெப்பம்
   2) தூசி
   3) பூச்சி
   4) ஈரலிப்பு

**(40 புள்ளிகள்)**

**பின்வரும் கூற்றில் இடைவெளிக்குப்பொருத்தமான பதத்தினை அடைப்புக்குறியினுள் தெரிந்தெடுத்து எழுதுக**

01. மையமுறைவழி அலகினுள் …………………………….. (நினைவகப்பதிவகம் / தற்போக்கு பெறுவழி நினைவகம்) காணப்படுகின்றது

02. இரண்டாம் தலைமுறைக்கணினிகளில் ……………………………( திரான்சிஸ்டர்/ ஒன்றினைந்த சுற்றுக்கள் பயன்படுத்தப்படுகின்றது.


03. இலக்கமுறை பல்திறவாற்றல் வட்டு (DVD/ CD) என அழைக்கப்படுகின்றது.

04. கோப்பு நீட்சியானது …………………( கோப்பில் / கோப்புறையில்) காணப்படுகின்றது.

05. அதிகளவு மின்சாரம்இ மின்னல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு……………….(உருகி, எழுச்சிப்பாதுகாப்பு) பயன்படுத்தப்படுகின்றது

**(10 புள்ளிகள்)**

**எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுதுக.**




01) மைய முறை வழி அலகில் காணப்படும் A, B ஆங்கில எழுத்தில் காட்டப்படும் பகுதிகள் எவை?

**(06 புள்ளிகள்)**

02) மைய முறை வழி அலகில் ஆங்கில எழுத்து A இனால் காட்டப்படும் பகுதியின் பணி யாது?

**(04 புள்ளிகள்)**

03) கீழே தரப்பட்டுள்ள மின்னனுத்தொழிநுட்பவியலுக்குப்பொருத்தமான தலைமுறைகளை எழுதுக.

**(08 புள்ளிகள்)**

04) காந்த ஊடகச் சாதனங்களுக்கான உதாரணங்கள் 2 தருக.

**(04 புள்ளிகள்)**

05) கோப்புறை என்றால் என்ன?

**(04 புள்ளிகள்)**

06) கோப்புறையின் அநுகூலங்கள் 2 தருக.

**(06 புள்ளிகள்)**

07) கணினியை பௌதீக சேதங்களிலிருந்து கணினியை பாதுகாப்பதற்காக நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 2 தருக.

**(06 புள்ளிகள்)**

08) கணினியை பௌதீக சேதங்களிலிருந்து கணினியை பாதுகாப்பதற்காக நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 2 தருக.

09) பிறழ் பொருளுக்கான உதாரணங்கள் 3 இனைத் தருக. **(06 புள்ளிகள்)**

10) பிறழ்பொருளினால் கணினிக்கு ஏற்படும் தீமைகள் 2 தருக **(06 புள்ளிகள்)**

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**